ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2158/3 - 2020 ජනවාරි මස 13 වැනි සඳුදා - 2020.01.13
*2158/3 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 13 ஆந் திகதி திங்கட்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசியலமைப்பின் 44 (1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரிடம், என்னால் உடனடியாக நடைமுறைப்படுத்தும் வகையில் இங்கே கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் ஒப்படைப்பு மேற்கொள்ளும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ரமேஷ் பதிரண,
பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும்
ஏற்றுமதிக் கமத்தொழில் அமைச்சர்.

*2020, சனவரி 09.*

1A - G 31793 — 417 (2020/01)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

**கௌரவ கஞ்சன விஜேசேகர - தேயிலைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் | III ஆம் நிரல் |
|---|---|---|
| *செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்* | *திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்* | *நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்* |
| 1. தேயிலை பயிரிடும் செயற்பாடுகளுக்காக தரம் மிக்க கன்றுகளை வழங்குவதன் ஊடாக அறுவடையை மேம்படுத்துவதற்காக தேவையான வசதிகள் வழங்குதல் | 1. இலங்கைத் தேயிலைச் சபை | 1. இலங்கை தேயிலைச் சபை சட்டம் (1975, இலக்கம் 14) |
| 2. தேயிலைக் கைத்தொழில் துறையின் உற்பத்தித்திறனுக்காக சர்வதேச போட்டியை மேம்படுத்துதல் | 2. தேயிலை ஆராய்ச்சி நிறுவனம் | 2. தேயிலை கட்டுப்படுத்தும் சட்டம் (1957, இலக்கம் 51) |
| 3. தேயிலை ஏற்றுமதிக்காக அனுமதிப் பத்திரங்கள் வெளியிடுதல் | 3. சிறு தேயிலைத் தோட்ட அபிவிருத்தி அதிகார சபை | 3. தேயிலை சக்தி நிதியச் சட்டம் (2000, இலக்கம் 47) |
| 4. தேயிலைக் கைத்தொழில் அபிவிருத்தி, மேம்பாடு மற்றும் ஆராய்ச்சிகளுக்குரிய செயற்பாடுகள் | 4. தேயிலைச் சக்தி நிதியம் | 4. சிறுதேயிலை தோட்ட அபிவிருத்திச் சட்டம் (1975, இலக்கம் 35) |
| | 5. வரையறுக்கப்பட்ட களுபோவிடியான தேயிலைத் தொழிற்சாலை | 5. தேயிலை மானியச் சட்டம் (1958, இலக்கம் 12) |
| | | 6. தேயிலை (வரி மற்றும் ஏற்றுமதி கட்டுப்படுத்தும்) சட்டம் (1959, இலக்கம் 16) |
| | | 7. தேயிலை ஆராய்ச்சி சபைச் சட்டம் (1993, இலக்கம் 52) |

---

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பு**

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 44 (5) ஆம் உறுப்புரையின் பிரகாரம், அரசியலமைப்பின் 44 (1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள ஏற்றுமதி விவசாய இராஜாங்க அமைச்சரிடம், என்னால் உடனடியாக நடைமுறைபடுத்தும் வகையில் இங்கே கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் ஒப்படைப்பு மேற்கொள்ளும் என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ரமேஷ் பதிரண,
பெருந்தோட்டக் கைத்தொழில் மற்றும்
ஏற்றுமதி கமத்தொழில் அமைச்சர்.

2020, சனவரி 09.

**அட்டவணை**

**கௌரவ ஜானக வக்கும்புர - ஏற்றுமதி விவசாய இராஜாங்க அமைச்சர்**

*I ஆம் நிரல்*

*செயற்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள்*

1. தேசிய உற்பத்திகளின் பெறுமதி சேர்த்தல், உயர் மதிப்புடைய பொருட்களை உற்பத்திச் செய்தல், ஏற்றுமதி சந்தை வாய்ப்புகள் விரிவடைதல் மற்றும் கைத்தொழில் பாதுகாப்பை ஏற்படுத்திக் கொண்டு விவசாயிகள் மற்றும் சிறியளவிலான வேளாண்மைத் தொழில் முணை வோர்கள் உலகளாவிய பொருளா தாரத்திற்காக உரிய நிறுவனங்களை ஒருங்கிணைப்புச் செய்துகொண்டு நடைமுறைப்படுத்துதல்
2. பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திகள் உட்பட நிலையான வளங்கள் பயன்பாடு மற்றும் உயிரியல் பாதுகாப்பை மேம்படுத்துவதற்காக தேவையான அபிவிருத்திக் கொள்கைகளை நடைமுறைப் படுத்துதல்
3. விவசாய அபிவிருத்தி வலயங்கள் தொடர்பான செயற்பாடுகள்
4. மீள் ஏற்றுமதிக்குப் பதிலாக இலவங்கப் பட்டை, மிளகு போன்ற தேசிய பயிர்கள் இலங்கை வர்த்தக பெயர்களாக ஏற்றுமதிச் சந்தைக்காக முன்னேற்றுதல்

*II ஆம் நிரல்*

*திணைக்களங்கள், நியதிச்சட்ட நிறுவனங்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள்*

1. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனம்.
2. வரையறுக்கப்பட்ட ஹிங்குரான சீனித் தொழிற்சாலைக் கம்பனி
3. வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) கம்பனி
4. கந்தளாய் சீனிக் கம்பனி
5. கரும்பு ஆராய்ச்சி நிறுவனம்
6. ஏற்றுமதிக் கமத்தொழில் திணைக்களம்
7. மசாலா மற்றும் அது சார்ந்த உற்பத்திகள் சந்தைப்படுத்தும் சபை

*III ஆம் நிரல்*

*நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய சட்டங்கள்*

1. கரும்பு ஆராய்ச்சி நிறுவனச் சட்டம் (1981, இலக்கம் 75)
2. ஏற்றுமதி விவசாய அபிவிருத்திச் சட்டம் (1992, இலக்கம் 46)

01-649

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.